# அறந்தாங்கி நகராட்சி
# நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்
## விளம்பி வருடம் ஆவணி மாதம் 25–ஆம் நாள் செப்டம்பர் மாதம் 10.09.2018ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

**பொருள் எண். 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட்–2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்

**பொருள் எண்–2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட்–2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்–3**

இந்நகராட்சி எல்.என்.புரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் தலைமை ஆசிரியரின் கோரிக்கையினை ஏற்று கூடுதல் வகுப்பறைகள் கட்டிடவும், தலைமை ஆசிரியர் அறை அமைக்க அனுதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.10.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

## பொருள் எண்–4

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.19.7.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.26.7.2018 ஆகியவற்றின்படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018 தேதிய ந.க.எண்.20555/18/ஆர்1 எண் சுற்றறிக்கையில் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்விற்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களை அடிப்படையாகக் கொண்ட சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்புகளை (Zonal Basic Value) மறு நிர்ணயம் செய்திட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலம் | 01.04.2008-ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (மண்டல மதிப்பு) | 01.04.2018-ல் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை (மண்டல மதிப்பு) |
|---|---|---|
| A | 0.90 | 1.35 |
| B | 0.60 | 0.90 |
| C | 0.50 | 0.75 |

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்.26.7.2018-ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018ம் தேதிய ந.க.எண்.20555/2018/ஆர்1 எண் சுற்றறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திடவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சியில் தற்போது சொத்துவரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து இந்நகர மக்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சாலைகள் வசதி போன்ற அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால், மேற்படி அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால், மேற்படி அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட ஏதுவாக சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயை பெருக்கும் பொருட்டு 01.04.2018 முதல் செய்யப்பட வேண்டிய பொது சொத்துவரி சீராய்விற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சதுர அடி உயர்வுக்கான மண்டல அடிப்படை மதிப்புகளை (Zonal Basic Value) தொகையை நிர்ணயம் செய்யலாம்.

2. அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்யலாம்.

   நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஏற்படுத்தப்பட்ட புதிய சொத்துவரி விதிப்புகள் மற்றும் மறு அளவீடு செய்து விதிக்கப்பட்ட சொத்துவரி விதிப்புகளிலும் எவ்வித மாறுதலும் செய்யப்பட வேண்டியதில்லை (No Revision)

   01.04.2018 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரிகளுக்கு அரசாணையின்படி மண்டல மதிப்பு (Zonal Value) உயர்வு செய்யப்படுவதால் மேற்படி சொத்துவரி விதிப்புகளுக்கும் உரிய கணக்கீட்டு தாள் தயார் செய்து உயர்த்தப்பட்ட சொத்துவரியில் வித்தியாசத் தொகையினை வசூல் செய்திடலாம்.

3. மேற்கண்டவாறு மண்டலங்களின் அடிப்டை மதிப்பு உயர்வு செய்யப்பட்டது குறித்து தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிட்டு பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற்று மீளவும் மன்றத்திற்கு பொருள் வைத்து இறுதி செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்–5**

அறந்தாங்கி நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | தி இந்து | 945/20.06.2018 | 20.06.2018 | 21,267 |
| 02 | மக்கள் குரல் | DIPF/90/2018-2019/MK | 26.08.2018 | 13,028 |
| 03 | மாலைமலர் | TRY-18020140 | 21.07.2018 | 15,225 |
| | | | மொத்தம் | 49,520 |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)

**பொருள் எண்–6**

அறந்தாங்கி நகராட்சி எல்.என்.புரம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வளாகம் மற்றும் கலவை உரக்கிடங்கில் மண்புழு உற்பத்தி செய்வதற்கு உரிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் மண்புழு உரம் உற்பத்திக்கு தேவையான தினக்கூலி பணியாளர்கள், இடுபொருட்கள் கொள்முதல் செய்து பயன்படுத்தி மண்புழு உர உற்பத்தி செய்ய ஆகும் செலவினங்களுக்காக ரூ.6,01,120/- க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.167 நாள்.15.12.2017ல் அனுமதி பெறப்பட்டுள்ளது . மேற்படி மன்ற அனுமதி வழங்கியுள்ள தொகையினை விட கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளதால், அதற்கான உத்தேச கூடுதல் செலவினம் ரூ.25000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அங்கீகரிக்கலாம் .(ந.க.எண் . 1912/2018/எச்1)

**பொருள் எண்–7**

சொத்துவரி அறந்தாங்கி நகராட்சியில் 01.04.2018–முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளுவதால் மண்டல அடிப்படை மதிப்பு (Zone Value) சொத்துவரி உயர்வு செய்யப்பட்ட அறிக்கையினை மாவட்ட அளவில் தினதந்தி நாளிதழில் 13.09.2018ந் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. வட்டார தினதந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள தொகை பட்டியல்படி ரூ.8,013.60/ஐ (பில் எண்.670 நாள்.13.09.2018) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.4579/2018 /அ1)

## பொருள் எண்–8

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வேலை பார்க்கும் துப்புரவு பணியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள் பொது பிரிவில் வேலைபார்க்கும் அலுவலக உதவியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் வேலைபார்க்கும் மின்கம்பி பணியாளர்கள் வாகன ஓட்டுநர்கள் குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் சீருடைபெற 2018–19 ம் ஆண்டுக்கு அரசு ஆணை எண் (2டி) எண் .37 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள் . 14.05.99 ன்படி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை 1.30 மீ *2 = 2.60 மீட்டர் இரண்டு ஜோடி பாலியெஸ்டர் சீருடைகள் மற்றும் தலைப்பாகை துணி 2 மீட்டர் மற்றும் காலனி 1 ஜோடி ஆண்கள் சீருடை ஒரு ஜோடிக்கு 400 /- வீதம் இரண்டு ஜோடி 800/- வீதம் வழங்கவும் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு செட் 1.80 மீட்டர் மற்றும் தலைப்பாகை துணி 2 மீட்டர் இரண்டு செட்டிற்கு தையற்கூலி 80/- வழங்கவும் . மேலும் மகப்பேறு உதவியாளருக்கு சீருடைப்படியாக ஒரு வருடத்திற்கு ரூ . 500/- வழங்கவும் மேற்படி சீருடை பெற தகுதியுள்ள நபர்களுக்கு சீருடை மற்றும் தையற்கூலி காலனிகள் வழங்க உத்தேச செலவினத்தொகை ரூ.600000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1 . மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.6086/2017/எச்1)

## பொருள் எண்–9

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகே செயல்பட்டு வரும் அம்மா உணவகம் முன்புறம் உள்ள காலியிடத்தில் புதுக்கோட்டை தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிட்டெட், அறந்தாங்கி நிறுவனம் மூலம் நீரா பானம் விற்பனை மையம் (KIOSK) அமைத்திட இந்நகர் மன்ற தீர்மான எண்.108 நாள்.20.08.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களால் 25.08.2018 கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 64 சதுரஅடி காலி இடத்திற்கு பொதுப்பணித்துறை விலை விகிதம் மற்றும் சந்தை வழிகாட்டி மதிப்பினை விட கூடுதலாக மாத தரை வாடகை ரூ.3000/– நிர்ணயம் செய்யப்பட்டு 01.08.2018 முதல் புதுக்கோட்டை தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிட்டெட், அறந்தாங்கி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி காலி இடத்தினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் புதுக்கோட்டை தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிட்டெட், அறந்தாங்கி நிறுவனத்திற்கு 64 சதுரஅடி இடத்திற்கு தரை வாடகையாக மாதம் ரூ.3000 /– நிர்ணயம் செய்து ஓராண்டு காலத்திற்கு வழங்கிடவும் மன்றம் அனுமதிக்காலம்.
3. தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி காலியிடத்தினை தரை வாடகை அடிப்படையில் 01.08.2018 முதல் ஒப்படைப்பு உத்திரவு வழங்கியதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 4676/2018/அ1)

## பொருள் எண்–10

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | Step Land Survey Consultants, Puducheary | நுகராட்சி கலவை உரக்கிடங்கின் உள்புறம் உள்ள குப்பை கழிவுகளை அளவீடு செய்து அதனை ஆட்டோகார்டு மற்றும் அளவுகளை தெரிவித்த வகையில் | 11250.00 |
| 2 | வீ.மதியழகன், பதிவறை எழுத்தர் | 2016–2017ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகள் மற்றும் குடிநீர் வைப்புத் தொகை பதிவேடுகள் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்யப்பட்டதற்கான தொகை | 3350.00 |
| 3. | ஆல் இந்தியா பன்றி மற்றும் நாய் பிடிப்பவர்கள், மதுரை | அறந்தாங்கி நுகர்வோர் தீர்மான நாள்.26.05.2018ன் படி நகராட்சி எல்லைக்குள் அதிக அளவில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அப்புறப்படுத்தப்பட்ட வகையில் மொத்தம் 550 நாய்களுக்கு ரூ.380.00 வீதம் வழங்கிய வகையில் | 2,09,000.00 |
| 4 | மு.அன்புமதி, ஓட்டுநர் | இந்நகராட்சி மட்கும் குப்பைகளை தனியாக பிரிக்கப்பட்ட பெட்டிகளை (திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தி உரம் தயாரிக்க ஏதுவாக பெட்டிகளை தினமும் எடை போட்டு வந்த வகையில் உண்டான செலவினம் | 2170.00 |
| 5 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | அரசு மருத்துவமனை நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 19000.00‘ |
| 6 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | வெள்ளாறு நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 8700.00‘ |
| 7 | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தனி நபர் கழிப்பிடம் கட்டும் திட்டம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை போட்டோ மற்றும் புக்லெட் தயார் வகையில் | 7545.00 |

**அலுவலகக்குறிப்பு:–**

பதிவு செய்யலாம்

## பொருள் எண்–11

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் தினசரி கொசு மருந்து அடிக்கப்படும் ஸ்பிரேயர் பழுதடைந்துவிட்டதால், கொசு மருந்து அடிக்க முடியாத சூழல் உள்ளது. எனவே, புதிய கைத்தெளிப்பான் இயந்திரம் (ஸ்பிரேயர்) 5 எண்ணிக்கை அரசு சார் நிறுவனங்களிடமிருந்து நேரடி கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
   (ந.க.எண். 5367/2018/எச்1)

**<u>பொருள் எண்–12</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கு வீடு வீடாகச் சென்று அடிக்கப்படும் கொசு மருந்து இயந்திரம் ( Indoor Fogging ) முழுவதுமாக பழுதடைந்து முற்றிலும் பயன்படுத்த முடியாத சூழல் உள்ளதால் புதிய கொசு மருந்து இயந்திரம் ( கை இயந்திரம் ) 15 எண்ணிக்கை அரசு சார் நிறுவனங்களிடமிருந்து நேரடி கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் ரூ.6.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
   ( ந.க.எண். 5371/2018/எச்1)

## மன்றப் பொருள்

அறந்தாங்கி நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணிகள் குறித்து தமிழக அரசின் சாதனை விளக்க மலரில் விளம்பரம் செய்த வகையிலும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | தி இந்து | 945/20.06.2018 | 20.06.2018 | 21,267 |
| 02 | மக்கள் குரல் | DIPF/90/2018-2019/MK | 26.08.2018 | 13,028 |
| 03 | மாலைமலர் | TRY-18020140 | 21.07.2018 | 15,225 |
| | | | மொத்தம் | 49,520 |

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)

தனி அலுவலர்/ ஆணையர்(பொ),
அறந்தாங்கி நகராட்சி

## மன்றப் பொருள்

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | Step Land Survey Consultants, Puducheary | நுகராட்சி கலவை உரக்கிடங்கின் உள்புறம் உள்ள குப்பை கழிவுகளை அளவீடு செய்து அதனை ஆட்டோகார்டு மற்றும் அளவுகளை தெரிவித்த வகையில் | 11250.00 |
| 2 | வீ.மதியழகன், பதிவறை எழுத்தர் | 2016–2017ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகள் மற்றும் குடிநீர் வைப்புத் தொகை பதிவேடுகள் ஜெராக்ஸ் மற்றும் பைண்டிங் செய்யப்பட்டதற்கான தொகை | 3350.00 |
| 3. | ஆல் இந்தியா பன்றி மற்றும் நாய் பிடிப்பவர்கள், மதுரை | அறந்தாங்கி நுகர்வோர் தீர்மான நாள்.26.05.2018ன் படி நகராட்சி எல்லைக்குள் அதிக அளவில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அப்புறப்படுத்தப்பட்ட வகையில் மொத்தம் 550 நாய்களுக்கு ரூ.380.00 வீதம் வழங்கிய வகையில் | 2,09,000.00 |
| 4 | மு.அன்புமதி, ஓட்டுநர் | இந்நகராட்சி மட்கும் குப்பைகளை தனியாக பிரிக்கப்பட்ட பெட்டிகளை (திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தி உரம் தயாரிக்க ஏதுவாக பெட்டிகளை தினமும் எடை போட்டு வந்த வகையில் உண்டான செலவினம் | 2170.00 |
| 5 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | அரசு மருத்துவமனை நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 19000.00‘ |
| 6 | கே.முகமது அலி ஜின்னா, லக்கி ரீவைண்டிங் | வெள்ளாறு நீருந்து நிலையத்தில் ஆழ்குழாய் மோட்டர் 20 எச்.பி. பழுது நீக்கம் செய்து ரீவைண்டிங் செய்த வகையில் உண்டான செலவினம் | 8700.00‘ |
| 7 | சி.சேகர், துப்புரவு ஆய்வர் | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தனி நபர் கழிப்பிடம் கட்டும் திட்டம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை போட்டோ மற்றும் புக்லெட் தயார் வகையில் | 7545.00 |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

பதிவு செய்யலாம்

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் தினசரி கொசு மருந்து அடிக்கப்படும் ஸ்பிரேயர் பழுதடைந்துவிட்டதால், கொசு மருந்து அடிக்க முடியாத சூழல் உள்ளது . எனவே, புதிய கைத்தெளிப்பான் இயந்திரம் ( ஸ்பிரேயர் ) 5 எண்ணிக்கை அரசு சார் நிறுவனங்களிடமிருந்து நேரடி கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 5367/2018/எச்1)

தனி அலுவலர்/ ஆணையர்(பொ),
அறந்தாங்கி நகராட்சி